**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender : | | |
| Miscellaneous : | | |
| Preliminary Register : CC 622/2019 | | |
| Sessions : | | |
| Deposition of Witness for : AW /PW- 6 | | Village : |
| Name : ராஜ்மோகன், காவல் உதவி ஆய்வாளர் | | Age : |
| | | Taluk : |
| Father's/Husband's Name : | | |
| Nationality : Indian | | |
| | | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 17/10/2022**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமை காவலர் திருமதி டென்னிசா மேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பனந்தாள் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு திருப்பனந்தாள் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆயவாளராக பணிபுரிந்த கோவிந்தராஜ், தற்போது இறந்துவிட்டார். அவருடைய கையொப்பத்தை எனக்கு நன்கு தெரியும். நான் இவ்வழக்கின் வழக்கு கோப்புகளின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக இருந்து சாட்சியம் முன்வைக்கிறேன். அவர் கடந்த 09/09/2016 ம் தேதி திருப்பனந்தாள் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது கும்பகோணம் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பட்ட தகவலைபெற்று அங்கு சிகிச்சையில் இருந்த கிருஷ்ணமூர்த்தி மகன் பிரபாகரன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று வந்து நிலைய குற்ற எண்.329/2016 ல் சட்டபிரிவுகள் 341,

294(பி), 324, 506(2) இதச படி வழக்கு பதிவு செய்து கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்பு வழக்கினை விசாரணைக்கு எடுத்து கொண்டு 09/09/2016 ம் தேதி காலைர 09.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சேகர் மற்றும் மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். ( **அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் பட்டியல் சாட்சிகள் பிரபாகரன், கவிதா, அப்பு (எ)மணிகண்டன் , வெங்கடேசன் ஆகியோரை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி சாட்சிகளை விசாரணை செய்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் எதிரியை தேடி வந்த நிலையில் ஆஜர் எதிரி 09/09/2016 ம் தேதி மதியம் 12.00 மணியளவில் திருப்பனந்தாள் புதிய பேருந்து நிலையம் அருகே நின்று கொண்டிருந்த ஆஜர் எதிரியை காரணம் கூறி கைது செய்து, நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து பாரா காவல் வசம் ஒப்படைத்து உரிய நடைமுறைக்குப்பின் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்துள்ளார். காயமுற்ற அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சித்ரா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, அ.சா.1 க்கான விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வந்துள்ளார். பின்னர் இத்துடன் விசாரணை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு ஆஜர் எதிரிக்கு எதிராக 30/09/2016 ந் தேதி சட்ட பிரிவுகள் 341, 294(பி), 324, 506(2) இதச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட விவரங்களை நான் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியமாக சொல்லியுள்ளேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 எனது விசாரணையில் 08/09/2016 ம் தேதி மாலை 07.00 மணியளவில் எனது வீட்டு வாசலில் எதிரி சிறுநீர் கழித்தார் என்றும், அது குறித்து கேட்டபோது, எதிரி அசிங்கமாக திட்டி கீழே தள்ளி கைகளால் தாக்கி, கத்தியால் நெஞ்சில் குத்தியதாகவும், அதனால் அங்கேயே மயங்கிவிட்டதாக சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. இவ்வழக்கில் அ.சா.1 க்கு

திருப்பனந்தாள் அரசு மருத்துவமனையில் முதலுதவி செய்த மருத்துவரை சாட்சியாக சேர்த்து விசாரிக்கப்பட்டுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்த்ததாக சொல்லப்படும் வாஞ்சிநாதன் என்பவர் இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து விசாரிக்கப்பட்டுள்ளாரா என்றால் இல்லை. இவ்வழக்கில் வழக்கு சொத்தக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 இடம் இருந்து ரத்த கறை படிந்த உடைகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். சிறப்பு உதவி ஆய்வாளர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யாமல் வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்கள் தயார் செய்து, எதிரி மீது பொய்யாக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**